ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 12,073 — 1960 මාර්තු 4 වැනි සිකුරාදා — 4.3.1960

12,073 ம் இலக்கம் — 1960 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 4 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 61 | ஆய விற்பனையும் குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 62 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 62 | அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள்பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும், பிறவும் .. .. | — | நாணயவிதம் .. .. .. | 64 |


## பதவிகள்—வெற்றிடம்

### சனப்பிரதிநிதிகள் சபை றிப்போட்டர்கள்

சனப்பிரதிநிதிகள் சபை, றிப்போட்டர் பதவியில் சேர விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர் சிங்கள, தமிழ் அல்லது ஆங்கில சுருக்கெழுத்தில் அதியுயர்ந்த திறமையுடையவராயிருக்க எதிர்பார்க்கப்படுகின்றனர்.

சனப்பிரதிநிதிகள் சபை றிப்போட்டருக்கான சம்பள விகிதம்.—

ரூபா 3,840—180 & 240—ரூபா 5,460
ரூபா 5,880—300—ரூபா 6,780
ரூபா 6,780—360—ரூபா 8,220

பாராளுமன்ற நிகழ்ச்சிகளை இருமொழிகளிற் பதிவு செய்யக்கூடிய வர்களுக்கு விசேட படிப்பணமும் வழங்கப்படும்.

விண்ணப்பிக்க விரும்புவோர், முதலில், அடியிற்காணும் கையொப்ப தாரிடமிருந்து 1960, மார்ச், 10 ஆந் தேதிக்கு முன் விண்ணப்பப் பத்திரங்களைப் பெறவேண்டும்.

P. B. இரத்னயக,
" ஹன்சாட் " ஆசிரியர்,

சனப்பிரதிநிதிகள் சபை,
கொழும்பு,
1960 ம் ஆண்டு பெப்ரவரி மீ 26 ந் உ.

---

### லஞ்சக் கமிஷனர் காரியாலயம்

#### பியன்

அரசாங்க உத்தியோகங்களில் பணியாற்றும் நிரந்தரம் அல்லது நியதியில்லா ஊழியர்களிடமிருந்து லஞ்சக் கமிஷனர் காரியாலயத்திற்கு பியன் சேவைக்கான விண்ணப்பப்பத்திரங்கள் அழைக்கப்படும்.

கீழ்காட்டப்பட்டுள்ள மாதிரிப் பத்திரத்தில் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து பங்குனி 26 ம் திகதி 1960 ம் ஆண்டுக்கு முன்பதாக அனுப்ப வேண்டும்.

**2. சம்பள விகிதங்களும் உத்தியோக நியமனங்களும்.**—உத்தியோகத்தில் தெரிவு செய்யப்பட்டவர்களின் உத்தியோக நிலைமை நிரந்தரமானது. ஆனால் இளைப்பாற்றுச் சம்பளம் கிடைக்காது. தெரிவு செய்யப்பட்டவர்கள் நிரந்தர ஊழியர்களாயின் இவ்வுத்தியோகத்தில் தெரிவு செய்யப்படுமாயின் இளைப்பாற்றுச் சம்பளத்திற்குள்ளாவார். கீழ்க்காணும் சம்பள நிலையில் அணைக்கப்படும். ரூ. 540—12—804. வாழ்க்கைச் செலவும், வாடகைச் செலவும் அரசாங்க முறைப்படி வழங்கப்படும்.

**3. தேவைப்படும் யோக்கியதாம்சங்கள்.**—(அ) விசேட குணமுடையவர்களாகவும், உடலுறுதியுடையோருமாகவும் ;

(ஆ) சிங்களம், ஆங்கிலம் வாசிக்கவும், எழுதவும் கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

**4.** விண்ணப்பத்தாள்களை தலைமைக்காரியாளர் மூலம் அனுப்பல் வேண்டும். நிரந்தர ஊழியர்கள் தங்கள் தலைமைக்காரியாளர்களிடமிருந்து தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்திற்கு வருமுன் அனுமதி பெறல் வேண்டும். அப்படியல்லாது வருமின் அவ்விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. குறிப்பிட்ட திகதிக்கு முன்னராக விண்ணப்பத்தாள்களை அனுப்பி வைத்தல் வேண்டும். குறிப்பிட்ட திகதி தவறினால் தங்கள் தலைமைக்காரியாளர்களிடமிருந்து போதிய அத்தாட்சி காட்டினதின் பின்தான் அப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளப்படும்.

5. விண்ணப்பதாரர்கள் தங்களுடைய விண்ணப்பங்களுடன் பின் வருவனவற்றின் பிரதிகளை தேவையான நேரகாலத்தில் அணைக்கக் கூடியதாக இருக்க வேண்டும் :—

(அ) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் (கவனி : பாடசாலைகளுக்காக வழங்கப்படும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது) ;

(ஆ) பாடசாலையில் வழங்கப்பட்ட கூடுதலான கல்வி தேர்ச்சிப் பத்திரங்கள்.

**கவனி** : விண்ணப்பத்தாள்களுடன் பத்திரங்கள் அல்லது அத்தாட்சிகள் ஆகியவை அணைக்கப்படக்கூடாது.

6. மேற்காணும் சம்பவங்களைப்பற்றி லஞ்சக் கமிஷனருக்கல்லாது இக் காரியாலயத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தருடைய பெயரிட்டு அனுப்பக்கூடாது.

7. " கசெற் " பத்திரிகை I ம் பாகம், II ம் பிரிவின் தொடக்கத்தில் பிரசுரித்திருக்கும் பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

ஏ. டபிள்யூ. எச். அபேசுந்தரா,
அக்டிங் லஞ்சக் கமிஷனர்.

லஞ்சக் கமிஷனர் காரியாலயம்,
கல்ஸ்டோர்ப்,
கொழும்பு 12, 1960 ம் ஆண்டு பெப்ரவரி மீ 26 ந் உ.

#### மாதிரி விண்ணப்பப் பத்திரம்

1. முழுப் பெயர் (பெரிய தனி எழுத்தில்) : ————.
2. விலாசம் : ————.
3. பிறந்த திகதியும், பிரஜையும் : ————.
4. கல்வித் தராதரங்கள்—
   (அ) ஆங்கிலம் : ————.
   (ஆ) சிங்களம் : ————.
   (இ) தமிழ் : ————.
5. தற்பொழுது செய்யும் தொழிலும், தெரிவு செய்யப்பட்ட திகதியும் : ————.
6. விசேட தகுதிகள் : ————.

மேற்கொடுக்கப்பட்டுள்ளதகவல்கள் உண்மையும் சரியுமென இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இவற்றுள் எதாவது தகவல் **உண்**மையற்று அல்லது பொய்யெனக் காணப்படின், தெரிவு செய்யப்பட்டதின் பிற் பாடாயின் உடனே நீக்கப்படுவேன் என்பதையும் அறிவேன்.

திகதி : ————. ————.
விண்ணப்பதாரின் ஒப்பம்.

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## கூட்டுறவுத் துறை

### கூட்டுறவுச் சங்கங்களின் மனேஜராக அல்லது காரியதரிசியாக நியமனம் பெற விரும்புவோருக்குரிய பயிற்சி

மேற்படி பயிற்சி பெறவிரும்புவோர் 1960 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ம் திகதிக்குமுன் " தலைவர் கூட்டுறவுக் கல்லூரி, பொல்கொல்லை " என்ற விலாசத்திற்குத் தங்கள் விண்ணப்பங்களை அனுப்பவேண்டும். விண்ணப்பப் பத்திரங்களைக் கூட்டுறவுக் கல்லூரித் தலைவரிடமிருந்து அல்லது விண்ணப்பம் செய்பவர் வசிக்கும் பகுதிக்குரிய உதவிக் கூட்டுறவு ஆணையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

### பயிற்சி விபரங்கள்

**காலம்.**—17.5.1960—16.8.1960.

**பாடங்கள்.**—கூட்டுறவு, கணக்குப்பதிவும் கணக்கியலும், செயலாளர் தொழிற் பயிற்சி, விற்பனவு முறையும் திருவாகமும்.

**பயிற்சி வகுப்பில் சேர்வதற்குரிய தராதரம்.**—விண்ணப்பம் செய்வோர்—

(1) 31.3.1960 ல் 18 வயதுக்கு மேற்பட்டவராயும் 40 வயதுக்குட் பட்டவராயுமிருத்தல் வேண்டும் ;

(2) சிங்கள அல்லது தமிழ் அல்லது ஆங்கில கனிஷ்ட பாடசாலைத் தராதரம் பெற்றிருத்தல் வேண்டும் ; அல்லது

அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு பதிவு பெற்ற. கூட்டுறவுச் சங்கத்தில் மனேஜராகவோ, காரியதரிசியாகவோ, எண்ணலாளனுகவோ, கணக்குப் பதிவாளனுகவோ கடமையாற்றி மாதச் சம்பளம் பெற்றிருத்தல் வேண்டும் ; அல்லது கூட்டுறவுக் கல்லூரி 1950 ம் ஆண்டு தொடங்கி 1957 ம் ஆண்டு வரை நடத்திய கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ; அல்லது கூட்டுறவுத் துறையின் விஸ்தரிப்புப் பகுதி வாரஇறுதிப் பணியாளர் வகுப்பின் முடிவில் நடத்திய பரீட்சைகளில் கூட்டுறவிலும் கணக்கியலிலும் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

**பயிற்சி நிலையங்கள்.**—(1) பொல்கொல்லை, நீர்கொழும்பு, காலி, குருநாகல், இரத்தினபுரி, பண்டாரவளை, அனுராதபுரம், மட்டக்களப்பு ஆகிய இடங்களிலுள்ள கூட்டுறவுக் கல்வி நிலையங்கள் (ஒவ்வொரு நிலையத்திலும் பயிற்சி பெறக்கூடியவரின் ஆகக்கூடிய தொகை 30. விண்ணப்பம் செய்வோர் நிலையங்கள் உள்ள மாகாணங்களில் வசிப்பவராய் அல்லது வேலை செய்பவராய் இருத்தல் வேண்டும். இவற்றில் தங்கும் வசதி கிடையாது. மட்டக்களப்பு நிலையத்தில் தமிழிலும் ஏனைய நிலையங்களில் சிங்களத்திலும் பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படும்).

(2) யாழ்ப்பாணக் கூட்டுறவுக் கல்லூரியில், யாழ்ப்பாணக் கூட்டுறவு மேற்பார்வைச் சபையாலும், கொழும்பிலும், சிலாபத்திலும், கேகாலையிலும், மாத்தறையிலும், களுத்துறையிலும், மன்னூரிலும், இலங்கைக் கூட்டுறவுச் சம்மேளனத்தாலும் இவ்வகுப்புக்கள் நடத்தப்படும். இவற்றில் சேர விரும்புவோர் பத்திரிகையில் அல்லது வேறு முறையில் அறிவித்தல் கொடுக்கப்படும் பிரகாரம் விண்ணப்பம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தெரிவு.**—ஒவ்வொரு நிலையத்திற்கும் பயிற்சியாளரைத் தெரிந்தெடுப்பதற்கு எழுத்துப் பரீட்சை வைக்கப்படும். ஆகவே விண்ணப்பங்களைக் கவனமாக எழுதி அனுப்பவேண்டும். தகுதியுள்ளவர் மட்டும் விண்ணப்பம் செய்யவேண்டியது அவசியம். விண்ணப்பங்களுடன் தெரிவுப் பரீட்சைக் கட்டணமாக ரூபா 2/- போஸ்ரல் ஆடர் மூலம் " இலங்கைக் கூட்டுறவுச் சம்மேளனம், கொழும்பு " என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். பிரயாணச் செலவு கொடுக்கப்படமாட்டாது. தகுதியின்றி விண்ணப்பம் செய்வோருக்குத் தெரிவுப் பரீட்சைக் கட்டணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

**கட்டணம்.**—பயிற்சி இலவசம். பயிற்சியின் முடிவில் நடைபெறும் பரீட்சையை எடுப்பவரிடமிருந்து ரூபா 2.50 அறவிடப்படும்.

**பரீட்சையும் தராதரப் பத்திரமும்.**—பயிற்சியின் முடிவில் நடைபெறும் பரீட்சையிற் தேறுபவர்கட்கு " கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் " வழங்கப்படும்.

**பயிற்சியின் பயன்.**—இப்பத்திரம் பெறும் யாவருக்கும், வேலை கிடைக்குமென்று கூட்டுறவுத்துறை உத்தரவாதம் அளிக்கவில்லை.

P. E. வீரமன்,
பதில் கூட்டுறவின் ஆக்க ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கப் பதிவாளரும்.

கூட்டுறவுத்துறை,
கொழும்பு,
19.2.60.

## சௌக்கியப் பகுதி

### பொதுச்சௌக்கிய பயில்வோர் பயிற்சி வகுப்புக்கு அனுமதிப்பதற்காகப் பரீட்சார்த்திகளைத் தேர்ந்தெடுத்தல்

11. 12. 59 ந் திகதிய 12,002 ஆம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானியில் 7. 12. 59 ந் திகதி குறிப்பிடப்பட்ட மேற்கூறிய விடய அறிவித்தல் தொடர்பாக. விண்ணப்பமுடிவு திகதி 1960 ம் ஆண்டு மார்ச் மாதம் 12 ந் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதென்பதை இத்தால் தெரியப்படுத்தப்படுகிறது. 7. 12. 59 ந் திகதிய அறிவித்தல் பிரகாரம் ஏற்கனவே தங்கள் விண்ணப்பங்களை அனுப்பியுள்ளவர்கள் மறுபடியும் விண்ணப்பிக்கவேண்டியதில்லை.

2. ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளதைப்போல, இப்பரீட்சை 1960 ம் ஆண்டு மார்ச் மாதம் 5 ந் திகதி நடைபெறமாட்டாது. அதற்குப் பதிலாக இப்பரீட்சை 1960 ம் ஆண்டு ஏப்ரில் மாதம் 2 ம் திகதி நடைபெறும்.

ஒப்பம் : பீ. இராஜசிங்கம்,
பிரதி சௌக்கிய அதிபதி,
(பொதுச் சௌக்கிய சேவை)
சௌக்கிய சேவை அதிபதிக்காக.

கொழும்பு,
1960 ம் ஸு மார்ச் மீ 1 ந் உ.

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கை இராசவிமானப் படை

### விமானக்களப் பாதை வேலை

ஏறக்குறைய 14,000 சதுரங்களான மணல் கலந்த பிற்றுமென் பாதை மேற்பரப்புக்கு இட்டு ஒப்புரவாக்குதற்கும் 1,700 சதுரம் பிற்றுமென் அஸ்போல்ற்றை மேற்பரப்பில் இடுவதற்கும், ஏற்கெனவேயுள்ள 23,000 அடிவரை நீளமான கொங்கிறீற் ஓட்டப் பாதைகளில் இருக்கும் இணைப்புக்களைத் துப்புரவு செய்து அவற்றை பிற்றுமென் விட்டு நிரப்புவதற்குமான அரக்குமுத்திரையிடப்பட்டு உறைக்குள் அடைக்கப்பட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்களை கொழும்பு, செனேற் கட்டிடத்தில் உள்ள பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் ஒப்பந்தக் கேள்விச் சபைத் தலைவர் 1960 ஆம் ஆண்டு, மார்ச் மாதம் 23 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணி வரை ஏற்றுக்கொள்வார்.

ஒப்பந்தக் கேள்வி நிபந்தனைகள் அடங்கிய பிரதியொன்றை, கொழும்பு, பார்சன் வீதியில் உள்ள விமானப் படைத் தலைமைக் காரியாலயத்தில் இருக்கும் பிரதான வேலை உத்தியோகத்தருக்கு விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பந்தக் கேள்விப்பத்திரம் பிறப்பிக்கப்படு முன், கொழும்பு 2, பார்சன் வீதியில் உள்ள விமானப் படைத் தலைமைக் காரியாலயத்தில் இருக்கும் சிவில் பரிபாலன உத்தியோகத்தரிடம் ஒப்பந்தக்கேள்வி வைப்புப்பணமாக 200 ரூபா செலுத்த வேண்டும்.

## நீர்ப்பாசன இலாகா

கண்டி பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர் அவர்களால் 1960 ம் ஆண்டு பங்குனி மாதம் 30 ந் திகதி காலை 10 மணிவரையும் நீர்ப்பாசன இலாகாவில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரரிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | | பதிவு செய்யப்பட்ட தொகை | | ரெண்டர் பணம் |
|---|---|---|---|---|
| | | ரூ. | | ரூ. |
| வெகொள்ள குளம் திருத்துவதற்கு | .. | 38,000 | .. | 50 |

கேள்விப் பத்திரங்கள் 5.3.1960 ல் இருந்து 29.3.1960 வரையும் நீர்ப்பாசன இலாகாவில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரரிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்படும்.

அரசாங்கத்திற்கு கீழ் தற்பொழுது வேலை செய்துகொண்டு இருக்கும் கொந்திருத்துக்காரர்கள் தாங்கள் செய்யும் வேலைகளின் தொகையையும் திருப்திகரமாகவும் செய்வதற்கு கேள்விப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளும் போது அத்தாட்சி காட்ட வேண்டும்.

கண்டி பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளர் அவர்களால் காலை 10.30 மணிக்கு கேள்விப் பத்திரங்கள் 30.3.60 ல் பார்வையிடப்படும். அச்சமயம் கேள்விப் பத்திரக்காரர்கள் விரும்பினுல் பிரசன்னமாயிருக்கலாம்.

த. வே. தருமலிங்கம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
நாளந்தை உப பகுதி.

நீர்ப்பாசன இலாகா, நாளந்தை,
1960ம் ஸு பெப்ரவரி மீ 16 ந் உ.

## நீர்ப்பாசன இலாகா

ரூபா 40,000 ம் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் நீர்ப்பாசன இலாகாவில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து பனங்காமக்குளத்தில் வேலை செய்வதற்குக் கேள்விப் பத்திரங்கள் வட-பகுதி நீர்ப்பாசன இஞ்சினியரால் (வவுனியா) 22.3.60 காலை 9.30 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஏனைய விபரங்கள் யாவும் உப-பிரிவு நீர்ப்பாசன இஞ்சினியரின் காரியாலயத்தில் (முருங்கன்) பெற்றுக்கொள்ளலாம். 21.3.60 வரைக்கும் விண்ணப்பப்பத்திரங்கள் வழங்கப்படும்.

நீர்ப்பாசன இஞ்சினியர்,
மன்னார் மாவட்டம்.

முருங்கன்,
1960 ம் ஆல் பெப்ரவரி மீ 12 ந உ.

---

## நீர்ப்பாசன இலாகா

ரூபா 30,000 ம் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் நீர்ப்பாசன இலாகாவில் பதிவுசெய்யப்பட்ட ஒப்ப்ந்தக்காரரிடமிருந்து ஐயம் பெருமாள் குளத்தில் வேலை செய்வதற்குக் கேள்விப் பத்திரங்கள் வட பகுதி நீர்ப்பாசன இஞ்சினியரால் (வவுனியா) 22.3.60 காலை 9.30 மணிவரையும் ஏற்றுக் கொள்ளப்படும்.

ஏனைய விபரங்கள் யாவும் உப-பிரிவு நீர்ப்பாசன இஞ்சினியரின் காரியாலயத்தில் (முருங்கன்) பெற்றுக்கொள்ளலாம். 21.3.60 வரைக்கும் விண்ணப்ப பத்திரங்கள் வழங்கப்படும்.

நீர்ப்பாசன இஞ்சினியர்,
மன்னார் மாவட்டம்.

முருங்கன்,
1960 ம் ஆல் பெப்ரவரி மீ 12 ந உ.

---

## நீர்ப்பாசனத் துறை

மொனருகலை நீர்ப்பாசன உப-பிரிவிலுள்ள எற்றிமொலவாவித் திட்டத்திலுள்ள பிரதான கட்டு உடைப்பை நிரப்புவதற்கான கேள்விப்பத்திரங்கள் கொழும்பு 1 இல் 355 ம் இலக்க அறையிலுள்ள, விவசாய நில அமைச்சின் கேள்விப்பத்திரச் சபைத்தலைவர் அவர்களால் 26-4-1960 செவ்வாய்க்கிழமை, காலை 10 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

நீர்ப்பாசனத் துறையிலும், புகையிரதப் பகுதியிலும், பொதுமராமத்து இலாகாவிலும் ரூபா 90,000 க்கு, அல்லது அதற்கு மேலும் பதிவு செய்துள்ள கொந்தராத்துக்காரர்கள் மட்டுமே மேற்படி கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கத் தகுதியுடையோராவர். பண்டாரவளையிலுள்ள ஊவாப் பகுதியின் பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர், அலுவலகத்தில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் அனுப்பப்படல் வேண்டும். எந்தக் கச்சேரியிலேனும் ரூபா 250 கட்டுப்பணமாய் கட்டிப் பெற்ற பற்றுச் சீட்டை சமர்ப்பித்து கேள்விப் பத்திரங்களை 22-4-1960 வெள்ளிக்கிழமை வரைக்கும் அலுவலக வேலை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். பண்டாரவளையிலுள்ள பெரும்பாக நீர்ப்பாசன அலுவலகத்தில் மேலதிகமான விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

பி. செல்லகேவா,
நீர்ப்பாசன அதிபருக்காக.

கொழும்பு,
1959 ம் ஆல் ஒக்டோபர் மீ 12 ந உ.

---

## நீர்ப்பாசனப் பகுதி

திசமகாருமு, நீர்ப்பாசனப் பிரிவிலுள்ள மகாகல்விவா திட்டத்தில் எல்லகல என்னுமிடத்தில் ஓவசியர் கட்டடம் அமைப்பதற்காக கேள்விப் பத்திரங்கள் தங்காலை தென் பகுதி நீர்ப்பாசன இன்ஜினியர் அவர்களால் நிகழும் சித்திரை மாதம் 5 ந் திகதி, 1960 ம் ஆண்டு செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் ஏற்றுக்கொள்ளலாம்.

நீர்ப்பாசனத்துறையில் ரூபா 20,000 த்துக்கு அல்லது அதற்குமேல் பதிவுசெய்யப்பட்ட கொந்தராத்துக்காரர்கள் மட்டுமே மேற்படி கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையோராவர்.

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதியில் அனுப்பப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் திசமகாரும நீர்ப்பாசன உதவி இன்ஜினியர் கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் 28.3.60 தொடக்கம் 1.4.60 வரைக்கும் பெற்றுக்கொள்ளலாம். எந்தக் கச்சேரியிலேனும் ரூபா 25 கட்டுப்பணமாகக் கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டை சமர்ப்பித்தே கேள்விப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம். ஏனைய விபரங்கள் திசமகாரும நீர்ப்பாசன உதவி இன்ஜினியரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

திசமகாரும, ஐ. டி. லிம்மா,
1960 ம் ஆல் பெப்ரவரி மீ 23 ந உ. நீர்ப்பாசன உதவி இன்ஜினியர்.

## நீர்ப்பாசனத் துறை

கொழும்பு 8, கொட்டாரோட்டில் உள்ளமேற்குப் பகுதிக்கு பொறுப்பான பொறியியலாளர், 1960 ம் ஆண்டு பங்குனி மாதம் 31 ம் திகதி வியாழக்கிழமை காலை 11.30 மணி வரைக்கும், கொழும்புப்பகுதியில் உள்ள (1) மாவோ விற்ர அணைக்கட்டு வேலைக்கும், (2) மகுலுவல பிற்றியா அணைக்கட்டுத்திருத்தவேலைக்கும், இக்காரியாலயத்தில் முறையே ரூபா 25,000 க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் ரூபா 15,000 க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும், பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடம் இருந்து முத்திரை இட்ட கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளுவார்.

கம்பகா, அத்தனுகலு ஓயாதிட்ட உப நீர்ப்பாசன அதிகாரியிடம் இருந்து பெறக்கூடிய கேள்விப்பத்திரங்களில் இணைப்பிரதிகள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும். இவரிடம் இவ்வேலைக்குரிய படங்களைப் பார்க்கவும், மற்றும் விபரங்களையும் அறிந்துகொள்ள முடியும்.

கேள்விப்பத்திரங்கள் 8.3.1960 இல் இருந்து 28.3.1960 வரைக்கும் அலுவலக நேரத்தில் தகுதிவாய்ந்தவர்கள் என அத்தாட்சிப்படுத்தும் ஒப்பந்தக்காரர்கள் இக்கந்தோரிலோ அல்லது கச்சேரியிலோ கட்டுப்பணம் கட்டிப்பெற்ற பற்றுச்சீட்டை சமர்ப்பித்து விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பிப்போர் தற்பொழுது அரசாங்கத்தில் வேறு வேலைகளுக்கு ஒப்பந்த முடையவராய் இருப்பின், அவ்வேலைகள் திருப்தி கரமாக நடைபெறு கின்றனவென பொறுப்பான அதிகாரிகள் இடம் இருந்து பெற்ற அத்தாட்சிப் பத்திரங்களையும், கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும் பொழுது சமர்ப்பித்தல்வேண்டும்.

எவ்வித கேள்வியும் இன்றி, கேள்விப்பத்திரங்களை முற்றுகவோ, அல்லது ஒரு பகுதியையோ, நிராகரிப்பதற்கும் அல்லது ஏற்றுக்கொள்வதற்கும் அரசாங்கத்துக்கு உரிமை உண்டு.

ரி. எல். எம். பாலதாசா,
உட்பிரிவு நீர்ப்பாசன அதிகாரி.

நீர்ப்பாசனக் காரியாலயம்,
கம்பகா,
1960 ம் ஆல் பெப்ரவரி மீ 18 ந உ.

---

## நீர்ப்பாசனப் பகுதி

கொழும்பு 8, கொட்டா வீதியிலுள்ள, மேற்குப் பகுதிப் பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர், களுத்துறை நீர்ப்பாசன உட்பிரிவின் கீழ் உள்ள இற்றப்பான திட்டத்தில் தொழிலாளர் இரட்டை வீடு அமைப்பதற்கு, இவ்விலாக்காவில் ரூபா 12,000 அல்லது கூடிய தொகைக்கு பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து, 25.3.60 காலை 11.30 மணிவரைக்கும் முத்திரை இடப்பட்ட கேள்விப் பத்திரங்களை ஏற்றுக் கொள்வார்.

களுத்துறை உட்பிரிவு நீர்ப்பாசன பொறியியலாளரிடமிருந்து பெறக் கூடிய கேள்விப்பத்திரங்களில் இணைப்பிரதிகள் மூலம் விண்ணப்பம் செய்யப்பட வேண்டும். இவரிடம் இவ்வேலைக்குரிய படங்களைப் பார்வையிடவும் மற்றும் விபரங்களை அறிந்துகொள்ளவும் முடியும்.

விண்ணப்பிப்போர், 22.3.60 வரை காரியாலய வேலை நேரங்களில், குறிக்கப்பட்ட தொகைக்குப் பதிவுசெய்யப்பட்டவர்களென அத்தாட்சியையும், கச்சேரியில் அல்லது களுத்துறை நீர்ப்பாசனக் கந்தோரில் ரூபா 25 முற்பணம் கட்டி, அப்பற்றுச் சீட்டையும் சமர்ப்பித்து கேள்விக் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

அரசாங்கத்திற்கு எவ்வித கேள்வியுமின்றி கேள்விப்பத்திரத்தை முற்றுக அல்லது ஏதாவது பகுதியை மட்டும் நிராகரிப்பதற்கும் ஏற்றுக் கொள்வதற்கும் உரிமையுண்டு.

விண்ணப்பிப்போர் தற்பொழுது அரசாங்கத்தில் ஏதாவது வேறு வேலைகளுக்கு ஒப்பந்தமுடையவர்களாயிருப்பின், அவ்வேலைகள் திருப்திகரமாக நடைபெறுகின்றனவென சம்பந்தப்பட்ட மேலதிகாரிகளிடமிருந்து அத்தாட்சிப் பத்திரம் பெற்றுக் கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

ஈ. ரணசிங்க,
களுத்துறை உட்பிரிவு நீர்ப்பாசன
பொறியியலாளர்.

---

## வித்தியா பகுதி

வசாவிளான் மத்திய கல்லூரியின் காற்றுடி யந்திரத்திலிருந்து சுழற்றப்பட்ட கீழ்ப் குறிப்பிடும் உபயோகமற்ற இரும்பாலான பொருட்களை வாங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள், யாழ்ப்பாணம் வித்தியா கந்தோர் கேள்விச் சபைத் தலைவரால் 1960 ம் ஆண்டு பங்குனி மாதம் 18 ந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

பொருட்கள் விபரம்—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 42′ நீளம் | 1½″ × 1½″ | அங்கிள் | இரும்பு | —4 |
| 2. | 12′ ,, | 1″ × 1″ | ,, | ,, | —5 |
| 3. | 10′ ,, | ,, | ,, | ,, | —5 |
| 4. | 7′ ,, | ,, | ,, | ,, | —3 |
| 5. | 5′9″ ,, | ,, | ,, | ,, | —4 |
| 6. | 4′9″ ,, | ,, | ,, | ,, | —4 |
| 7. | 3′0″ ,, | ,, | ,, | ,, | —4 |
| 8. | 4′8″ ,, | ,, | ,, | ,, | —2 |
| 9. | 0′10″ ,, | ,, | ,, | ,, | —2 |
| 10. | 0′8″ ,, | ,, | ,, | ,, | —2 |
| 11. | 1′8″ ,, | ,, | ,, | ,, | —3 |
| 12. | 2′0″ ,, | ,, | ,, | ,, | —4 |
| 13. | 2′10″ ,, | ,, | ,, | ,, | —4 |
| 14. | 4′0″ ,, | ,, | ,, | ,, | —4 |
| 15. | 5′6″ ,, | ,, | ,, | ,, | —4 |
| 16. | 7′8″ ,, | ,, | ,, | ,, | —3 |
| 17. | 9′9″ ,, | ,, | ,, | ,, | —3 |

2. விண்ணப்பிப்பவர்கள் பாடசாலை நாட்களில் காலை 9 மணிக்கும் பி.ப. 3.30 மணிக்குமிடையில் பொருட்களைப் பார்வையிடலாம். விண்ணப் பக்காரர் முழுப்பொருட்களுக்கும் விண்ணப்பிக்கவேண்டும். தனிப்பட ஒன்றுக்கு விண்ணப்பிக்க முடியாது.

3. விண்ணப்பக்காரர் எழுத்து மூலம் பதிவுசெய்த தபாலில் தலைவர், கேள்விச்சபை, வித்தியா கந்தோர், யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு விண்ண்ப்பிக்க வேண்டும். தபால் உறையின் இடதுபக்க மேல்மூலையில் “ அங்கிள் இரும்பு வாங்குவதற்கான விண்ணப்பம் ” என்று குறிப்பிட வேண்டும்.

4. கேள்விச்சபையின் தீர்ப்பு தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பக்கார ருக்கு உடன் அறிவிக்கப்படும். அறிவித்தல் கிடைத்த ஒரு வாரத்திற்குள் முழுப்பணமும் விண்ணப்பகாரனால் கச்சேரியில் கட்டப்பட வேண்டும். அதற்கான பத்திரம் வித்தியா கந்தோரில் பெற்றுக் கொள்ளலாம். பணம் கட்டிய இருவாரத்திற்குள் பொருட்கள் அப்புறப்படுத்தப்பட வேண்டும். இக்குறிப்பிட்ட காலத்திற்குள் பொருட்கள் அப்புறப்படுத்தப் படாவிட்டால் அவைகள் ஏலத்தில் விற்கப்படும்.

சி. உ. சோமசேகரம்,
வித்தியாதிகாரி, வ. மா.

வித்தியா கந்தோர்,
யாழ்ப்பாணம்,
25.2.60.

---

## தபாற் தந்திப் பகுதி

### 20,000 மரத் துண்டுகளை அளிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள்

இப்பகுதி அளிக்கும் நியமங்களுக்கிணங்க பலவித அளவுகளில் 20,000 மரத்துண்டுகளை அளிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் 1960 ம் ஆண்டு பங்குனி (9.30 வரை) மாதம் 18 ந் திகதிவரை கொழும்பு, மத்திய தந்திக் கந்தோர், தந்தி தெலிபோன் பிரதான இஞ்சினியரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திர விண்ணப்பங்கள், கொழும்பு மத்திய தந்திக் கந்தோர், தந்தி தெலிபோன் பிரதான இஞ்சினியரிடமிருந்து பெற்ற பத்திரங்களில் (இரட்டைப் பிரதிகளில்) அனுப்பப்படல் வேண்டும். கொழும்பு, மத்திய தந்திக் கந்தோர் தந்திக் காசாளரிடம் அல்லது வெளியிடமாயின் அப்பகுதி தபாற் கந்தோர்த் தலைவரிடம், கேள்விப்பொறுப்புப் பணமாக ரூபா 100 கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டைச் சமர்ப்பிப்பவர்களுக்கே கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் வழங்கப்படும்.

கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் 1960 ம் ஆண்டு பங்குனி மாதம் 17 ந் திகதி பி. ப. 4 மணிவரை வழங்கப்படும்.

ஒப்பந்தத்தை முறைப்படி நிறைவேற்ற, இரண்டு ஒப்பந்தங்களைப் பெறுவதற்காக இரண்டு உத்தரவாதிகளை தமது செலவிலேயே தரு வதற்கு தெரிவு செய்யப்பட கேள்விப்பத்திர விண்ணப்பதாரர் தேவை யானபோது வேண்டப்படுவார்.

ஒப்பந்தத்தை முறைப்படி நிறைவேற்றுவதற்காக, தெரிவு செய்யப் பட்ட விண்ணப்பதாரர் கேள்விப்பத்திர மதிப்பின் 5 வீதத் தொகையை தபாற் தந்தித் தலைமை அதிபதியிடம் காசாக பிணைப்பணம் கட்ட வேண்டப்படுவதுடன் ஒப்பந்தத்திற் சேரும்போது, உடன்படிக்கையில் முத்திரைச் சட்டப்படி, முத்திரைகளை ஒட்டவும் கடமைப்பட்டவராவார்.

கேள்விப்பத்திர முடிவு திகதியிலிருந்து குறைந்தது பதினைந்து (15) நாட்கள் வரை கேள்விப்பத்திரங்கள் ஒப்புக் கொள்ளுவதற்குத் தகுதி யானவையாக இருக்க வேண்டும்.

1960 ம் ஆண்டு பங்குனி மாதம் 18 ந் திகதி மு.ப. 10 மணிக்குஅமைச் சின் கேள்விப் பத்திரசபைக் கந்தோரில் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் பொழுது கேள்விப்பத்திர விண்ணப்பதாரர்கள் சமூகமளிக்கலாம்.

எச். ஈ. செனவிரத்ன,
தபாற் தந்தித் தலைமை அதிபதி.

பிரதம தபாற் கந்தோர், கொழும்பு,
1960 ம் ஆண்டு பெப்ரவரி மீ 25 ந் உ.

---

## நானாவிதம்

### பிறநாட்டுத் தொழிற் தாபனங்களின் உள்ளூர்ப் பிரதிநிதிகளிடமிருந்து பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள்

தந்தி தெலிபோன் உபகரண் உற்பத்தியாளர்களின் தத்துவம் பெற்ற உள்ளூர்ப் பிரதிநிதிகளிடமிருந்து பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கொழும்பு, மத்திய தந்திக் கந்தோர், தந்தி தெலிபோன் பிரதான இஞ்சினியரால் 18. 3. 1960 பி.ப. 4 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். அவர்கள் உள்ளூர்ப் பிரதிநிதிகளென தத்துவம் பெற்றவர்களென்ப தற்கு ஆதாரமாக, சாசனச் சான்றுப்பத்திரங்களை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

எச். ஈ. செனவிரத்ன,
தபாற் கந்தோர்த் தலைமை அதிபதி.

கொழும்பு 1,
1960 ம் ஆண்டு பெப்ரவரி மீ 25 ந் உ.

1955 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி தொடக்கம் அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய திருத்தப்பட்ட கிரய விகிதங்கள்

# " இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்) "

வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன், **அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு,** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. கிழமை நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையும், சனிக்கிழமைகளில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. கிழமை நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும், சனிக்கிழமைகளில் நண்பகல் 12 மணிக்கும் பணங் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. " நகலை " **கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக " ரைப் " அடித்தல்** பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் புறொக்ரரல் " கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப் படமாட்டா.

10. **1955 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி** தொடக்கம் அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் பின்வருமாறு :—

| | | ரூ. | ச. |
|---|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. | .. | 10 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி | .. | 5 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் | .. | 60 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | .. | 120 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமைதோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும்.** அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி)** அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

13. **ஒரு வருடத்திற்கு அல்லது அரை வருடத்திற்குரிய சந்தா, முன்பணமாக கொழும்பு, அரசாங்கப் பிரசுர நிலைய அதிபரால் பதிவு செய்யப்படும்.**

14. **சந்தா விகிதங்கள்—**

| | ரூ. | ச. | |
|---|---|---|---|
| ஒரு வருட சந்தா .. | 15 | 0 | .. ஒவ்வொரு பகுதிக்கும் |
| | 7 | 0 | .. ஓராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவுக்கும் |
| ஒவ்வொரு பகுதியினதும் தனிப் பிரதி .. | 0 | 25 | |
| | 0 | 31 | .. தபாற் செலவுடன் |
| ஓராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 | 10 | |
| | 0 | 14 | .. தபாற் செலவுடன் |

15. கைவசமுள்ள பழைய பிரதிகளுக்கு இரட்டிப்புப் பணம் செலுத்தப்படல் வேண்டும். **கொழும்பு, அரசாங்கப் பிரசுர நிலைய அதிபர் அவர்கட்கு விண்ணப்பிக்கவேண்டும்.**


இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது